# ராகினி என் வசமாக...

*ஐந்நூறு ரூபாய் சன்மானம்!*

*சுமார் ஐந்தடிப் பத்து அங்குலம் உயரமுள்ள இளைஞர். வயது இருபத்தெட்டு. அடர்த்தியான ஒன்று சேர்ந்த புருவம். சிவப்பு நிறம். உயரத்திற்கு ஏற்ற புஷ்டி இல்லாத உடம்பு. இடது காதுக்கு அருகில் கால் அங்குலம் குறுக்களவுள்ள மச்சம். இடது கையில் 'ராகினி' என்று பச்சை குத்தியிருக்கும். மேற்படி அடையாளங்கள் உள்ளவரைக் கண்டவர், கண்ட இடம், நேரம், இவற்றைக் குறிப்பிட்டு, பெட்டி எண் 1062, இந்தப் பத்திரிகையின் மேற்பார்வைக்கு முகவரியிட்டுத் தகவல் தெரிவித்தால் ரூபாய் ஐந்நூறு வரைச் சன்மானம் பெறலாம்.*

சமீபத்தில் இந்த விளம்பரத்தைக் கொடுத்தவன் நான்தான். எக்கச்சக்கமான செலவு! இன்றுடன் முப்பது நாள்களாகின்றன. தேடுகிறேன். அகப்படவில்லை.

வியாழக்கிழமை என்று நினைக்கிறேன். ஒரு மத்தியானம் என்று நினைக்கிறேன். செங்கற்பட்டு அருகில் உள்ள ஒரு கிராமம் வரைச் சென்றுவிட்டு – செயற்கை உரம் தயார் செய்யும் கம்பெனியில் 'ஸேல்ஸ்' வேலை எனக்கு – செங்கற்பட்டு ஜங்ஷனில் ரயில் ஏறினேன். ஏனோ அன்று கூட்டமே இல்லை. நான் ஏறிய பெட்டி காலியாக இருந்தது.

காலியான பெட்டியில் ஏறி, ஜன்னல் அருகில் உட்கார்ந்து கொண்டு பிரயாணம் செய்வது வாழ்க்கையின் அற்ப சந்தோஷங்களில் ஒரு முக்கியமான அற்ப சந்தோஷம். ஒரு மணி நேரத்துக்கு அந்தச் சதுர அடிகள் நம் சாம்ராஜ்யம். நமக்கே சொந்தம். நினைத்தது போல் பாடலாம், 'வாடாஆ மச்சான்' என்று தமிழ் சினிமா பாட்டுப் பாடினேன். எதிர்புறத்து ஸீட்டில் காலை நீட்டிக் கிடத்திக் கொண்டு கையிலிருந்த சினிமாப் பத்திரிகையில் வந்திருந்த நடிகை ஆரியமாலாவின் போட்டோ தகவலில் ஆழ்ந்தேன்.

நான் ஒரு சாதாரணன். வாழ்க்கையில் பல்லக்கில் போகிறவர்கள் மிகச் சிலர்; மற்றவர்கள் பல்லக்குத் தூக்கித்தான் ஆக வேண்டும் என்பதைக் கேள்வி கேட்காமல் ஒப்புக்கொண்டவன். அந்தக் கூட்டத்திலும் நான் ஓர் எறும்பு; ஒரு எக்ஸ். மிதியடியின் மேல் எழுதியிருக்கும் நல்வரவு, செய்தித்தாள்களை நம்புகிறவன். தொடர் நாவலில் வரும் மாலா, சேகரைக் கல்யாணம் செய்து கொள்வதில் சந்தோஷம் கொள்கிறவன். என் சாதாரணத் தன்மையில் எனக்கு வருத்தம் கிடையாது. அதில் ஓர் இதம் இருக்கிறது. நான் நானாக இருப்பதில்தான் என்றும் எனக்கு ஆசை.

அப்பொழுதுதான் அவர் வண்டியில் ஏறினார். மற்ற இடங்கள் காலியாயிருக்க நேராக என் எதிரில் வந்து உட்கார்ந்தார். பக்கத்தில் ஒரு பிரம்புப் பெட்டியை ஜாக்கிரதையாக வைத்தார். தகர டிரங்கை மேலே அனுப்பினார். என் எதிரில் கால்களை மடக்கிக்கொண்டு ரிஷி மாதிரி உட்கார்ந்தார்.

"காலியாகத்தான் இருக்கிறது. பேச்சுத் துணைக்கு உங்கள் பக்கம் வந்தேன். மாம்பலத்தில் இந்த வண்டி நிற்காதே?" என்றார்.

"நிற்காது" என்றேன். அவரைப் பார்த்த முதல் செகண்டிலிருந்து அவரை எனக்குப் பிடிக்கவில்லை. என் சாம்ராஜ்யத்தை ஆக்ரமித்தாரே என்று அவரிடம் இருந்த ஓர் அற்புதமான கவர்ச்சியைக்கூட நான் பொருட்படுத்தவில்லை.



www.writersujatha.com

அவர் ரிஷி மாதிரிதான் இருந்தார். மஞ்சளா, சில்க்கா என்று சொல்ல முடியாதபடி ஜிப்பா. அதில் கறுப்புக் கயிற்றில் சரடிட்ட தங்க(?)ப் பித்தான்கள். நெற்றியில் புனுகு. முன் மண்டையில் அடிபட்டு, நெற்றியில் ரத்தம் வழிந்தாற்போல் குங்குமம். வெளிர் அடர்த்தியான புருவங்கள். அவற்றின் நிழலில் இருந்த மெல்லிய ஊடுருவும் பார்வை. மஞ்சளில் 'ராமா ராமா' என்று வடமொழியில் எழுதியிருந்த மேல் துண்டு. கையில் மோதிரம். இரும்பு மோதிரம். மணிக்கட்டை இறுக்கும் கறுப்புக் கயிறு. சத்தியமாக நான் அவருடன் ராத்திரியில் தனியாகப் போகமாட்டேன்.

"தம்பிக்கு எங்கே போக வேண்டும்?" என்றார். குரலா அது? டி.எம்.எஸ்.சுக்கு ஜலதோஷம் பிடித்தாற்போல.

"மதராஸ்" என்றேன்.

"மதராஸில் எங்கே தம்பி?"

"வில்லிவாக்கம்."

"வில்லிவாக்கத்தில் எங்கே?"

"கார்ப்பரேஷன் ஸ்கூலுக்குப் பக்கத்தில், பால் டிப்போவுக்கு எதிரே, மூன்றாவது மாடி வீடு, இடது பக்கம்" என்றேன் வெறுப்புடன்.

வரிசையாகச் சொன்னதிலேயே என் வெறுப்பைக் காட்டிவிட்டு வெளியே பார்த்தேன். தந்திக் கம்பம் – தந்திக் கம்பம் – தந்திக் கம்பம்…

மெல்லிய மாலை, தூரத்தில் சூரியனின் அம்பர் முயற்சித் தகடு போல்…

"தகடு போல் இல்லை, சூரியன்?" என்றார்.

"ம்" என்றேன்.

"தம்பி, என்னைக் கண்டால் உனக்குப் பிடிக்கவில்லை. இல்லையா?" என்றார்.

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. நீங்கள் யார், நான் யார்?" என்றேன், சினிமாப் பத்திரிகையைப் பார்த்துக்கொண்டே.

"இல்லை தம்பி, உன் முகம் சொல்கிறது. உன் முகம் மேலே எத்தனையோ விஷயங்களைச் சொல்கிறது."

அவற்றை நான் அறிந்துகொள்ள ஆவலாயில்லை. மேலும் அந்தப் பயம் என்னுள் உருவாகிக்கொண்டிருந்தது. ஆரம்பித்த சம்பாஷணையில் ஏதோ ஒரு தப்பு இருக்கிறது. அல்லது சூழ்நிலையில் அல்லது எதிலோ? சூரியனை அந்தத் தொடுவானம் சாப்பிடுவது போல் மிக மெதுவாக நான் ஆழ்ந்துகொண்டிருக்கிறேன்…

'பா… ங்' என்றது எங்கள் இன்ஜின், உச்ச வோல்ட் ஏ.ஸி. பெருமிதத்துடன்.

"தம்பி, நீ ஒரு பெண்ணை மனத்தில் நினைத்திருக்கிறாய்." என்றார்.

நான் சும்மா இருந்தேன்.

"அந்தப் பெண்ணுக்கு உன்மேல் ஆசை இல்லை."

நான் சும்மா இருந்தேன்.

“உண்டா இல்லையா, தம்பி?”

“பெரியவரே! நான் யாரை மனத்தில் நினைத்தால் என்ன, யாரை நினைக்காவிட்டால் என்ன? நீங்கள் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். மேலும், ஜன்னலோரத்தில் உட்கார்ந்துகொண்டு சினிமா பத்திரிகை படிக்கும் எந்த இளைஞனும் ஒரு பெண்ணை மனத்தில் நினைத்திருப்பான். இதில் ஜோசியம் என்ன? என்னைப் பற்றிக் கவலைப்–படாதீர்கள்.”

www.writersujatha.com

“அந்தப் பெண்ணின் பெயர் ராகினி.” என்றார்.

“கையில் பச்சை குத்தி இருக்கிறது” என்றேன்.

“நான் அதைப் பார்க்கவில்லை. தம்பி! என்னைப் பற்றி உனக்குத் தெரியாது இப்பொழுது இந்த செகண்டில், இந்த இடத்தில் அந்தப் பெண்ணை உனக்கு எதிரே கொண்டுவந்து நிறுத்துகிற சக்தி எனக்கு இருக்கிறது தம்பி!” என்றார்.

“வேண்டாம்” என்றேன். அந்தக் குறைந்த பரப்பில் ஒரு பெண் காற்றுடன் போராட எனக்கு உத்தேசமில்லை. எனக்கு வர வர அந்தப் பயம் அதிகமாயிற்று, பெரியவரிடம் நான் எக்கசக்கமாக மாட்டிக்கொள்ளப் போகிறேன் என்று. எப்படி மாட்டிக்கொள்ளப் போகிறேன் என்று தெரியாதவரை அதில் ஒரு கவர்ச்சியும் இருந்தது. பெரியவர் பக்கத்திலிருந்த பிரம்புப் பெட்டியை எடுத்தார்.

“தம்பி, இந்தப் பெட்டிக்குள் என்ன இருக்கிறதென்று தெரியுமா?”

“தெரியாது. தெரிந்துகொள்ள விருப்பமும் இல்லை.”

“நாகம்” என்றார்.

“அப்பாடி – என்னது?”

“நாகம்! கருநாகம். தளதளவென்று மின்னுகிற கறுப்பு. எனக்கு அடிமைப்பட்ட நாகம். நான் சொல்வதைக் கேட்கும் நாகம். மகுடி வேண்டாம். பால் வேண்டாம். என் கண்ணால் நேராகப் பார்த்தால் ஆடாமல் அசையாமல் அரைமணிநேரம் நிற்கும். ஒரு எலி, தவளை, தின்னாது. சைவம். பார்க்கிறாயா?” என்றார்.

“வேண்டவே வேண்டாம்; நான் நிறைய நாகம் பார்த்திருக்கிறேன்.”

www.writersujatha.com

“பயப்படாதே, தம்பி. நான் ரொம்பச் சக்தி வாய்ந்தவன். இது ஒன்றும் பண்ணாது...”

கிட்டக்கிட்டக் கொண்டு வந்து, நான் விலக விலக என்னை மூலையில் மடக்கிச் ‘சரேல்’ என்று பெட்டியைத் திறந்தார்.

பெட்டிக்குள் அதைப் பார்த்தேன். அசிங்கப் பளபளப்பில், இயல்பான க்யூ வரிசையை மேலேயிருந்து பார்ப்பது போல் ஊறிக்கொண்டு ஒரு பாம்பு.

இல்லை இல்லை, பெட்டி காலி!

“பார்த்தாயா, தம்பி! பெட்டி காலி. நீ பார்த்தது உன் மனசில் நான் ஏற்றின பிம்பம். தம்பி, என்னை அலட்சியம் பண்ணாதே. புத்தகத்தைக் கீழே வை. நான் நினைத்தால் உன் புத்தகத்தைத் தானாகப் பறந்துபோகும்படி பண்ணுவேன். உன் நல்ல காலம். நாம்

www.writersujatha.com

இப்பொழுது தனியாகச் சந்தித்திருக்கிறோம். உனக்கு நல்லது செய்யத்தான் நான் வந்திருக்கிறேன். பீதாம்பர வித்தை தெரியுமா, உனக்கு?”

என்னைப் பதில் சொல்லவிடவில்லை அவர். பதில் சொல்ல முடியாத பிரமிப்பு என்னிடம் இன்னும் மிச்சம் இருந்தது.

“தெரியாது? சொல்கிறேன் அதை. அந்த வித்தையை எனக்குச் சொல்லிக்கொடுத்தவர் ஒரு மகான். அவர் பல்லக்கில் போவார். பல்லக்கைப் பின்னாலே மட்டும் இரண்டு பேர் தாங்கிக்கொண்டு போவார்கள். முன்பக்கம் காலியாக இருக்கும். அப்படிப்பட்ட மகான். அவருடைய பிரதம சிஷ்யன் நான். மாந்த்ரீகத்தில் கரை கண்டவன். இப்பொழுது நீயே இருக்கிறாய். உனக்குக் காரியசித்தி ஆவதற்கு ஒரு வழி சொல்கிறேன் கேள். நீ நினைக்கிற பெண் யார், சொல்லு!”

பேசாமல் இருந்தேன்.

“சொல்லு!”

சொல்ல வேண்டி இருந்தது.

“பெரியவரே, இது ஏதோ சின்ன சமாச்சாரம். அவள் கோடி வீட்டில் இருந்தாள். ஆபீஸ் போகும்போது மெதுவாக நடந்து போவாள். அழகாக இருப்பாள். ஒரு தடவை பேசியிருக்கிறேன். பல தடவை நினைத்திருக்கிறேன். பைத்தியக்காரத்தனமாகப் பச்சை குத்திக்கொண்டேன். வயசுக் கோளாறு. கலியாணம் ஆகாததிலே ஏற்படுகிற சாதாரணமான சலனம். பெரிசாக ஒன்றுமில்லை.”

“தம்பி, உனக்கு மனசு ரொம்ப வீக்! பாம்பு இல்லாத இடத்தில் பாம்பைப் பார்க்கிற மனசு. மனசிலே பலம் ஏற்ற வேண்டும். பலம் ஏற்றினால் இந்த உலகத்தையே ஆளலாம்.”

“நீங்கள் அரசாள வைக்கும் உலகத்தில் எனக்கு விருப்பமில்லை” என்றேன்.

“குறுக்கே பேசாதே... தம்பி! நான் ஒரு வழி சொல்கிறேன். கேள். முளகரணைச் செடிக்குச் சுக்கிரவாரம் மஞ்சள் ஜலம் தெளித்து அந்த இடத்தைச் சுத்தம் செய்து பொங்கல் இட்டு, மஞ்சள் நூல் காப்புக் கட்டி, பொங்கல் இட்டதை நைவேத்தியம் செய்து, அந்தச் செடியின் வடக்குப் பக்கம் போகிற வேரை ஒன்றரை அங்குல நீளம் துண்டித்து, அதை மஞ்சள் ஜலத்தில் அலம்பி, மஞ்சள் நூலில் கட்டிக் குங்குமம் இட்டு, ‘ஓம் வாலை பரமேஸ்வரி! நான் நினைத்த ராகினி என் வசமாக சுவாஹா’ என்று 108 தரம் சொல்லி, தூபதீபம் காட்டி, ஒரு வெள்ளித் தாயத்தில் அடக்கம் செய்து வலது கையில் கட்டிக்கொள். இந்த மாதிரி தினம் 108 தடவை ஐந்து நாட்கள் ஜெபித்தால் அந்தப் பெண் ஐந்தாம் நாள் ராத்திரி உன்னைத் தேடி வருவாள்” என்றார்.

நான் சிரித்தேன். ‘நெர்வஸாக’ச் சிரித்தேன்.

“சிரிக்கக்கூடாது; சிரித்தால் நல்லதல்ல” என்றார்.

“பெரியவரே! எனக்கு இதில் எல்லாம் நம்பிக்கை இல்லை” என்றேன்.

“தம்பி, என்னை ஏதோ பிதற்றும் கிழவன் என்று இன்னும் எண்ணிக்கொண்டிருக்கிறாய். அதர்வ வேதசாரம் நான். ஜெர்மன் புத்தகங்கள் படித்திருக்கிறேன். என்னைத் தெரியாது உனக்கு. கூடுவிட்டு கூடு பாயும் வித்தை தெரியுமா? விக்கிரமாதித்தன் கதைகளில் வருகிறதே...”

“ஏன்! அந்த வித்தையும் செய்வீர்களா?”

“செய்வேன்” என்றார்.

நான் மறுபடி சிரித்தேன். “பெரியவரே, நம் தேசம் இந்த மாதிரி சீர்கேடாக இருப்பதற்கு உங்கள் மாதிரி ஆள்கள்தான் காரணம். பாம்பு, தேள், மகமாயி, கருமாரி என்று சூறையாடும் தெய்வங்களைக் கொண்டு வந்தவர்களை எல்லாம் பயம் காட்டிச் சுரண்டி எத்தனை காலம் வாழ்ந்திருக்கிறீர்கள்! பாரதி சொன்னது போல் இந்த மரத்தில், அந்தக் குளத்தில் என்று அச்சப்படுத்திப் படிப்பில்லா ஜனங்களின் பேதமையைப் பயன்படுத்திக்கொள்ளும் குற்றவாளிகள் நீங்கள். பெரியவரே, இது சயன்ஸ் யுகம். ஜனங்கள் படிக்க ஆரம்பித்து விட்டார்கள். ஏமாறுவதற்கு அதிக ஆட்கள் இனிமேல் அகப்பட மாட்டார்கள்!” என்றேன்.

பெரியவர் மௌனமாக என்னைப் பார்த்தார். அவரை எதிர்த்து என்னால் பார்க்க முடியவில்லை.

“என்ன சொன்னே, தம்பி?”

“நம்புவதற்கு வேறு ஆளைப் பாருங்கள்” என்றேன்.

“நம்பமாட்டே நீ?”

“ம்ஹூம்!”

“கூடுவிட்டுக் கூடு பாய்வது முடியாது என்கிறாய்?”

“முடியாது!”

“பார்.”

“பார்க்கத் தயாராயில்லை.”

“நான் சொல்வதைத் கேள்.”

“கேட்க இஷ்டமில்லை.”

“டேய்!”

அந்த வார்த்தை என் மண்டையில் அடிபட்டு வலித்தது. அது என் பேச்சை நிறுத்தி விட்டது.

“நீ என்னை நம்பமாட்டாய்? சொல்வதைக் கேள். கேட்பது உன் விதி. உன் விதி இந்த ரயிலில் நாம் இருவரும் தனியே எதிர் எதிராகி இருப்பது. உன் விதி இனி நடக்கப்போவது, இந்த ரயில் எப்படிப் போகிறது? எங்கே போகிறது? ஏன் போகிறது? எந்த ரயில் இந்த ரயில்? எந்தத் திசை இந்தத் திசை? எந்த ஓசை, இந்த ஓசை... தந்த தந்தன தந்த தந்தன...”

எப்பொழுது என்ன கேட்டேன் நான்? சந்தம் நிறைந்த அவர் வார்த்தைகளையா? ரயில் வண்டியில் தடத் தடத் தடதடத் தடதடவையா? என் இதயத்தின் ‘திடும் திடும்’களையா...?

அவர் பேசிய வாக்கியங்கள் எனக்குப் புரியவில்லை. ஆனால் அதன் ரீங்காரம், அதன் கீழ்ஸ்தாயி என்று என் ரத்தத்துடன் கலந்தது போல் தெரிந்தது. அதே சமயம் ‘மனிதன் சாதாரண ஹிப்னாடிஸ முறையை உபயோகிக்கிறான். மனசில் திடமிருந்தால் எதிர்க்கலாம். பயப்படாதே. பயப்படாதே’ என்று எனக்குள் சொல்லிக் கொண்டு, கைகளை இறுக்கிக்கொண்டு, அவர் வார்த்தைகளின் சந்த பந்தத்திலிருந்து விடுபட முயற்சி செய்தேன்.

முடியவில்லை, என் உடம்பை அசைக்க முடியவில்லை. அசைக்கும் விருப்பம்தான் மிச்சம் இருந்தது. என்னை முழுவதும் அந்த வார்த்தைகள் கட்டுப்படுத்தின. மெல்ல மெல்ல உடம்பில் எட்டுக்கால் பூச்சி ஊறுகிறாற்போல் அந்த வார்த்தைகள் விளையாடின. நேருக்கு நேராக அவரையே ஓர் அசட்டு அடக்கத்துடன் பார்த்துக் கொண்டிருக்க...

*திலதயிலத் திட்டொக்க வெரிக்கத்*
*திரிபலை சுக்குத் திப்பியிலிட்டு*

அவர் உதடுகள்! அவர் உதடுகள்! திடீரென அவை பெரிதாகிப் பெரிதாகி இருபது சதுர மைல் உதடுகளாகி, ‘ஸர்ரியஸிஸம்’ போல் அவற்றின் ஒவ்வொரு மடிப்பும் வெடிப்பும் பிரம்மாண்டமான பாளங்களாகத் தெரிய, வெற்றிலைக் கறைகள் ரத்தத் திட்டுகளாக... தனியாக நான் அந்தப் பிரதேசத்தில் அவர் தொடுத்த வார்த்தைகளின் துடிப்பால் அலைந்து தவிப்பது போல் தெரிந்தது.

*திருவடியைப் பற்றித்*
*தொழுதுற்று*
*ஜெனன மறுக்கைக்குப்*
*பரமுக்திக் கருள் தாராய்*
*ஜெனன மறுக்கை*
*ஜெனன மறுக்கை...*

அப்புறம் நான் நிச்சயம் நினைவிழந்தேன். எப்பொழுது எனத் தெரியவில்லை. நினைவிழந்தேன்... நினைவிழந்தேன்... ஏன் என்பது தெரியாத...

எனக்குப் பேசும் சக்தி, நினைக்கும் சக்தி வந்தபோது விநோதமாக உணர்ந்தேன். ரயில் எழும்பூரை அடைந்துகொண்டிருந்தது. ஆனால், அது பின்பக்கம் போவது போல் இருந்தது. அது ஏன் என்று புரியவில்லை. என் பெயர் எனக்கு ஞாபகமில்லை. எல்லாம் தூரத்தில் நிகழ்வது போல் இருந்தது. ரயில் நின்றது. அவர் குரல் கேட்டது.

“இப்பொழுதாவது என் சக்தியில் நம்பிக்கை இருக்கிறதா தம்பி? நான் போய் வருகிறேன்.”

நம்பிக்கை இருக்கிறது என்று சொல்லத் தேவை இல்லாமல் இருந்தது. ஏன்?

*நான் எழுந்து சென்று அந்தக் கூட்டத்தில் மறைவதை நானே பார்த்தேன்.*

*1971*

www.writersujatha.com